# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 31 புதன்கிழமை 31.12.2024 கதிர் 82







## ஜனாதிபதி தலைமையில்

# "தூய இலங்கை" செயற்றிட்ட அங்குரார்ப்பணமும், அரச ஊழியர்கள் சத்திய உறுதியுரையும் நாளை!

**(கொழும்பு, டிச. 31)**

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள "க்ளீன் ஶ்ரீலங்கா" செயல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வும், 2025 ஆம் ஆண்டு அரச பணிகளை ஆரம்பித்தல் நிகழ்வும் ஒருங்கிணைந்ததாக நாடளாவிய ரீதியில் ஜனாதிபதி செயலகத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது.**

**நாளை ஜனவரி முதலாம் திகதி அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்துப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை ஒன்றின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.**

அதன்படி, "தொடங்கவிருக்கும் 2025 ஆம் ஆண்டின் கடமைகளை ஆரம்பிக்கும் ஜனவரி மாதம் 01ஆம் திகதி புதன்கிழமை "க்ளீன் ஶ்ரீலங்கா" நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பித்து வைத்தல், அரச துறை மற்றும் தனியார் துறை ஒருங்கிணைந்து மேற்கொள்வதற்கு "க்ளீன் ஶ்ரீலங்கா" சனாதிபதி செயலணி ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்துள்ளது. அதன்போது, அனைத்து அரசதுறை நிறுவனங்களின் தலைவர்கள், ஒட்டுமொத்த அரச சேவையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் ஒத்துழைப்புடன், ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் செயற்பாடுகளிற்கு இணையாக தமது சேவை நிலையங்களில் கடைமைகளை ஆரம்பிக்கும் உத்தியோக பூர்வ வைபவத்தை நடாத்துதல் வேண்டும். பொது மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில், பொதுமக்களுக்கு வினைத்திறனுடனும் பயனுள்ளதுமான அரச சேவையினை வழங்குவதற்காக ஒட்டுமொத்த அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்களும் திடசங்கற்பத்துடன் அர்ப்பணிக்க வேண்டியுள்ளதால், அதற்கு இணையாக அன்றைய தினம், அதே நேரத்தில் நிகழ்ச்சிகளைத் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்" என அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், "நாளை காலை 08.30 மணிக்கு அனைத்து அரச அலுவலகங்களிலும் அவ்வவ் அலுவலகங்களின் தலைவர்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டும்.

7➤

## தமிழரசு தலைநிமிர வேண்டும்! கஜேந்திரகுமார் வலியுறுத்து



கொழும்பு, டிச. 31

இலங்கைத் தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை இழந்த பாதையைத் தொடர்கின்ற வகையில் கட்சியின் முடிவுகள், பதவிகள் அமையக்கூடாது என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்

7➤

## முல்லைத்தீவு முகாம் தடுப்பு மையமானது



கொழும்பு, டிச. 31

இலங்கை விமானப்படை முல்லைத்தீவு முகாமை "தடுப்பு மையமாக" பிரகடனப்படுத்தும் அதிவிசேட வர்த்தமானி அறி வித்தல் திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டது. முல்லைத்தீவு விமானப்படைத்

7➤



## மாணவனை மிரட்டி 67,000 ரூபாய் கொள்ளை

கொழும்பு, டிச. 31

தனியார் வகுப்புக்கு வந்த மாணவனை கத்தியை காட்டி கொலை மிரட்டல் விட்டு, அவரை காரில் பலவந்தமாக ஏற்றிச்சென்று 67,000 ரூபாயை கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் காருடன் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தில் இருந்து அநுராதபுரத்திற்கு தனியார் வகுப்புக்கு வந்த மாணவனிடம் இருந்தே,

7➤

## எலிக்காய்ச்சல் விழிப்புணர்வு நடைபவனி



கொழும்பு, டிச. 31

எலிக்காய்ச்சலில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு எலிக்காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி

7➤

## சிகரெட் மற்றும் விஸ்கி கடத்திய வர்த்தகர் கைது




கொழும்பு, டிச. 31

10 மில்லியன் ரூபாய் பெறுமதிமிக்க வெளிநாட்டு சிகரெட் மற்றும் விஸ்கியை கடத்தியதற்காக 45 வயதுடைய வர்த்தகர் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இன்று காலை விமான நிலைய பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கொழும்பு 14, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன் வர்த்தக நோக்கத்திற்காக அடிக்கடி விமானப் பயணத்தில் ஈடுபடுபவர் ஆவார்.

அவர் இன்று அதிகாலை

7➤

# புலமைப்பரிசில் வெளியான தீர்ப்பு



கொழும்பு, டிச. 31

அண்மையில் நிறைவடைந்த தரம் 05இற்கான புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளின் முன்கூட்டியே வெளியான மூன்று வினாக்களுக்கு இலவச மதிப்பெண்கள் வழங்குவது, அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், வல்லுநர்கள் முன்வைத்த மூன்று பரிந்துரைகளில், பொருத்தமான பரிந்துரையை தேர்வு செய்து, உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த வினாத்தாள்கள் வெளியானதில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்களான, ஜ.ஜி.எஸ். பிரேமதிலக மூன்று மில்லியன் ரூபாவையும், சமிந்த குமார இளங்கசிங்க இரண்டு மில்லியன் ரூபாவையும் அரசாங்கத்திற்கு இழப்பீடாக செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் தாக்கல் செய்த நான்கு அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்த மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இந்த தீர்ப்பை அறிவித்துள்ளது.

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளில் மூன்று கேள்விகள் முன்கூட்டியே வெளியிடப்பட்டதன் காரணமாக, அந்த பரீட்சையில் தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் இலவச மதிப்பெண்கள் வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தால் தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இதனூடாக, தங்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு ஒன்றை வழங்குமாறு கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தந்தையால் அடித்துப் படுகொலை



கொழும்பு, டிச. 31

பூண்டுலோயா - டன்சினன் பகுதியில் 25 வயதிற்குட்பட்ட இளைஞரொருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று(30) இரவு இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகின்றது.

குறித்த இளைஞனின், தந்தை மற்றும் தம்பியால் இவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறு பிரச்சினை காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் கைகலப்பாகி கொலையில் முடிந்துள்ளதாக தெரிவிககப்படுகின்றது.

மேலும், உயிரிழந்தவரின் தந்தை மற்றும் அவருடைய தம்பி ஆகிய இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# யாழ். நகரில் விஜயகாந்தின் சுவரொட்டிகள்




*கொழும்பு, டிச. 31*

*மறைந்த இந்தியத் திரைப்பட நடிகர் விஜயகாந்த்தின ஓராண்டு நினைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் நகரின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.*

*நடிகர் மற்றும் அரசியல்வாதியாகச் செயற்பட்ட காலத்தில் ஈழத் தமிழர்கள் மீதும், அவர்களின் போராட்டம் மீதும் அதிக பற்றுடனும் உணர்வுடனும் செயற்பட்ட ஒருவர் என்ற வகையில் ஈழத் தமிழர்களின் மனங்களில் விஜயகாந்த் இடம் பிடித்திருந்தார்.*

*ஈழத் தமிழர்களின் போராட்ட ஆர்வம் காரணமாகத் தனது மகனுக்குப் பிரபாகரன் என்ற பெயரையும் விஜயகாந்த் சூட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# சிறுவர்கள் மத்தியில் பரவும் வைரஸ் மருத்துவர் விடுத்துள்ள எச்சரிக்கை



கொழும்பு, டிச. 31

சமகாலத்தில் சிறுவர்கள் மத்தியில் பல வகை வைரஸ் காய்ச்சல்கள் பரவி வருவதாக சிறுவர் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலை விடுமுறை என்பதாலும் சுற்றுலா மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுவதாலும் பிள்ளைகள் வைரஸ் தொற்றுகளுக்கு ஆளாவதே இதற்குக் காரணம் என வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்ஃப்ளுயன்ஸா ஏ மற்றும் பி நோய், வயிற்றுப்போக்கு, கடுமையான குளிர், உடலில் சிவப்பு புள்ளிகள், காய்ச்சல் மற்றும் நீண்ட கால இருமல் ஆகியவை வைரஸால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் அறிகுறிகளாக தெரிவிக்கப்படுகின்றன.

ஆனால் இந்த நோய் ஒரு வைரஸ் என்பதால், நுண்ணுயிர் எதிர்ப்பிகளை கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

இந்த நோயைக் குணப்படுத்துவதற்கு குறிப்பிட்ட அளவுகளில் மட்டுமே பராசிட்டமோல் கொடுப்பதும் ஓய்வு எடுப்பதும் மிகவும் அவசியமானது என்றும் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

சில சிறுவர்களுக்கு நோய் குணமான பிறகு தலைவலி அல்லது இருமல் வரக கூடும் என்பதால், பெற்றோர்கள் தேவையான மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறு மருத்துவர் கேட்டுக்கொண்டுள்ளர்.

எந்த வகையிலும் இந்த வைரஸ் நிலைமைகள் உள்ள பிள்ளைகள் குளிப்பதற்கு அச்சப்படத் தேவையில்லை. வெதுவெதுப்பான நீரை உடலில் ஊற்றினால் காய்ச்சல் குறையும் என்பது மருத்துவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# கோவிட் குறித்த தரவுகளை சீனாவிடம் மீண்டும் கோரும் உலக அமைப்பு



சீனாவின் வுஹான் நகரில் கோவிட் தொற்றுநோய் பரவ ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்தநிலையில் அதன் தோற்றம் குறித்த தரவுகளைப் பகிர்ந்து கொள்ளுமாறு உலக சுகாதார நிறுவனம் சீனாவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இது ஒரு தார்மீக மற்றும் அறிவியல் கட்டாயமாகும் என்று உலக சுகாதார மையம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாடுகளுக்கு இடையே வெளிப்படைத்தன்மை, பகிர்வு மற்றும் ஒத்துழைப்பு இல்லாமல், எதிர்கால தொற்றுநோய்களுக்கு உலகத்தால் போதுமான தயார் நிலையை உருவாக்க முடியாது என்றும் உலக சுகாதார மையம் குறிப்பிட்டுள்ளது.

பல விஞ்ஞானிகள் கோவிட் வைரஸ் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு இயற்கையாகவே பரவியதாக நினைக்கிறார்கள்.

ஆனால் அது வுஹானில் உள்ள ஒரு ஆய்வகத்திலிருந்து வெளிப்பட்டதாக சில சந்தேகங்கள் தொடரகின்றன.

இதற்கிடையில் உலக சுகாதார மையத்தின் புதிய கோரிக்கைக்கு சீனா இன்னும் பதிலளிக்கவில்லை.

தகவல்களின்படி சீனாவின் வுஹான் ஆய்வகத்தில் இருந்து வைரஸ் தொற்று பரவிய செய்தி 2019 டிசம்பர் 31ஆம் திகதி வெளியானது. 2020 விடியற்காலையில் உலக சுகாதார மையத்தின் பணியாளர்கள் தமது அவசர நிலையை ஆரம்பித்தனர். அடுத்த வந்த மூன்று நாட்களில் உலக சுகாதார மையம், தமது உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டது.

2020 ஜனவரி 9-12 திகதிகளுக்குள், அந்த அமைப்பு, நாடுகளுக்கான அதன் முதல் விரிவான வழிகாட்டுதல்களை வெளியிட்டது,

இந்தநிலையில், பாரிய அழிவுகளை அடுத்து 2023 இல் கோவிட்டில் இருந்து உலகம் விடுபட்ட செய்தியை உலக சுகாதார மையம் வெளியிட்டது.

இதேவேளை உலக சுகாதார மையத்தின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸின் தகவல்படி, கோவிட்டினால் குறைந்தது ஏழு மில்லியன் மக்கள் இறந்துள்ளனர்.

எனினும் உண்மையான எண்ணிக்கை 20 மில்லியன் என்றும் அதிகார பூர்வ மதிப்பீட்டை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். இதற்கிடையில் அடுத்த தொற்றுநோய் எந்த நேரத்திலும் வரலாம் என்றும் அதற்கு உலகம் தயாராக இருக்கவேண்டும் என்றும் கெப்ரேயஸ் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# ஊழல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்!

மட்டக்களப்பு டிச. 31

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலத்தில் அபிவிருத்தி பணிகளின்போது நடைபெற்ற ஊழல்கள் தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் முன்னெடுக்கப்பட்ட 725மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் 25மில்லியன் ரூபாய்களாக பிரிக்கப்பட்டு எந்தவித ஒப்பந்த விண்ணப்பக் கோரல்களும் இல்லாமல் முறைகேடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது ஆட்சியில் எந்தவொரு அரசியல் தலையீடும் இருக்காது, அதனையும் மீறி அரசியல் ரீதியாக எமது பெயரை கூறிக்கொண்டு யாரும் வந்தால் உடனே எமக்கு அறியத்தாருங்கள்" என குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, மாவட்டத்தில் இடம்பெற்றதாக கருதப்படும் காணி மோசடிகள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகள், பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வனவிலங்கு பிரச்சினைகள், நீர்பாசனம், கனிய வள அகழ்வு, அனர்த்த முன்னாயத்த செயற்பாடுகள், கல்வி, சுகாதாரம், மீன் பிடி, மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி விடயங்கள், ஏனைய அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.




அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திப்பது தொடர்பாக அபிவிருத்தி குழுத் தலைவர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரினால் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சில விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக உப குழுக்கள் நியமிக்கப்பட்டதுடன், அவர்களின் பரிந்துரைகளுக்கு அமைய முடிவுகள் எடுக்கப்படும் என தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜெஸ்டினா முரளிதரன் ஏற்பாட்டில் இடம் பெற்ற குறித்த மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான கந்தசாமி பிரபு, இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புழ்ழா, முஹம்மட் சாலி நளீம், கிழக்கு மாகாண அரச திணைக்களங்களின் செயலாளர்கள், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான சுதர்ஷனி ஸ்ரீகாந்த், நவரூபரஞ்சனி முகுந்தன் (காணி), பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உயரதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய அரச திணைக்களங்களின் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# அரச ஊழியர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு



கொழும்பு, டிச. 31

நாடாளவிய ரீதியிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் நாளையதினம் புத்தாண்டு கடமைகளை ஆரம்பிக்கும் உத்தியோகபூர்வ வைபவம் இடம்பெறும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசியலமைப்பு சபைகளுக்கு இது தொடர்பில் அறிவித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

புதிய வருடத்தில் "தூய்மையான இலங்கை" தேசிய வேலைத்திட்டத்துடன் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் துறையுடன் இணைந்து தூய்மையான இலங்கை திட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாளை ஜனாதிபதி அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

அதற்கமைவாக அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களும் முழு அரச சேவை ஊழியர்களின் பங்களிப்புடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெறும் பணிகளுக்கு சமமாக தமது பணியிடங்களில் பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தூய்மையான இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடங்கும் தேசிய நிகழ்வை அனைத்து அரசு மற்றும் தனியார் இலத்திரனியல் அலைவரிசைகள் ஊடாக ஒலி, ஒளிபரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், அனைத்து அரச நிறுவனங்களின் ஊழியர்களும் அதனை காணும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அனைத்து அரச ஊழியர்களும் தூய்மையான இலங்கை உறுதிமொழியை நேரலையில் வாசிக்குமாறு பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தனது சுற்றறிக்கை மூலம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# எரிபொருளின் விலையில் மாற்றம்



கொழும்பு, டிச. 31

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள எரிபொருளின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்திற்கு அமைய இவ்வாறு எரிபொருளின் விலையில் மாற்றங்கள் ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

இதேவேளை, இறுதியாக கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருளின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெட்ரோல் லீட்டர் ஒன்றின் விலை 2 ரூபாவினால் குறைக்கப்பட்டிருந்தது. அத்துடன், அத்துடன், ஒட்டோ டீசல் லீட்டர் ஒன்றின் விலை 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டது.

மேலும், மண்ணெண்ணெய்யின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதுடன், ஒக்டேன் 95 ரக பெட்ரோல் மற்றும் சுப்பர் டீசல் ஆகியவற்றின் விலைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காலி முகத்திடலில் நடைமுறைக்கு வரும் தடை

கொழும்பு, டிச. 31

புத்தாண்டு தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு இன்றைய தினம் காலிமுகத்திடல் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு பொலிசார் தடை விதித்துள்ளனர்.

2025ஆம் ஆண்டை வரவேற்பதற்காக பெருந்தொகையான மக்கள் இன்று செவ்வாய்க்கிழமை(31) காலி முகத்திடல் வளாகத்திற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



அதனை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொலிசார் அறிவித்துள்ளனர்.

கொழும்பு நகரில் எதிர்பார்க்கப்படும் கடுமையான வாகன நெரிசலைக் குறைக்கும் வகையில், புறக்கோட்டை, கொம்பனித் தெரு, மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, கறுவாத் தோட்டம் போன்ற பொலிஸ் பிரிவுகளில் இந்த விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் இன்றைய தினம் காலி முகத்திடலில் வாகன நிறுத்துமிடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படாது என்றும், வாகனங்கள் நிறுத்துவதற்காக வேறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# முன்னாள் அமைச்சர் மனுஷ வெளிநாட்டுக்கு தப்பியோட்டம்

கொழும்பு, டிச. 31

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார குடும்பத்துடன் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் அமைச்சர் குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக சில சமூக ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மனுஷ நாணயக்கார சுவிட்சர்லாந்து சென்றதாகவும் பின்னர் அங்கிருந்து பிரிதொரு ஐரோப்பிய நாட்டுக்கு சென்றுள்ளதாகவும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

முதலில் மனுஷ நாணயக்கார வெளிநாடு சென்றதாகவும், பின்னர் அவரது குடும்பத்தினர் இணைந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், முன்னாள் அமைச்சர் வருட இறுதிக் கொண்டாட்டங்களுக்காக குடும்பத்துடன் வெளிநாடு சென்றுள்ளதாகவும் நாட்டை விட்டு வெளியேறவில்லை எனவும் அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் வழங்குவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் அமைச்சர் மனுஷவின் சகோதரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், இந்த சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் மோசடி குற்றச்சாட்டுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் மனுஷ அதிகாரபூர்வமான தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

மாலைக்கதிர்
Maalaikkathir



# தற்காலிக முதல்வர் எனக் கூறிய சக்சேனாவுக்கு அதிஷி கொடுத்த பதிலடி!




டெல்லி மாநில மதுபானக் கொள்ளை தொடர்பான மோசடி வழக்கில் முதல்வராக இருந்த அரவிந்த் கெஜ்ரிவால், பிணையில் சிறையில் இருந்து வெளியே வந்தவுடன் மக்கள் தன்னை நிரபராதி என அழைக்கும் வரை முதல்வர் பதவியை பெற மாட்டேன் என தனது பதவியை ராஜினாமா செய்தார். இதனால் அதிஷி டெல்லி முதல்வராக கடந்த செப்டம்பர் 21 ஆம் திகதி பதவி ஏற்றார்.

இந்த நிலையில்தான் அதிஷியை தற்காலிக முதல்வர் என அரவிந்த கெஜ்ரிவால் அழைத்து வருவது வேதனையளிக்கிறது என டெல்லி மாநில துணைநிலை ஆளுநர் சக்சேனா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஆளுநர் சக்சேனாவுக்கு அதிஷி பதிலடி கொடக்கும் விதத்தில் தனது புத்தாண்டு வாழ்த்து அறிக்கையில் சக்சேனாவின் கருத்துக்கு பதிலளித்த அதஷி, வரவிருக்கும் புத்தாண்டில் ஆளுநர் தனது கட்டைப் பை அரசியலை [baggage of politics] விட்டுவிட்டு மக்கள் நலனில் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் ஆளுநரின் நடவடிக்கைகளில் உள்ள பிரச்சனைகளை சுட்டிக்காட்டிய அதிஷி, ஜஅரசுக்குஸ ஆக்கப்பூர்வமான வகையில் ஒத்துழைப்பதை விட ஜஅரசியல்ஸ விமர்சனம் செய்வதற்கே ஆளுநர் முக்கியத்துவம் அளிக்கிறார். தேவையில்லாத குறுக்கீடுகளால் முக்கிய பணிகளில் குறுக்கிட்டு தாமதம் செய்கிறார். மகிளா சம்மான் யோஜனாவை ஜமகளிருக்கு மாதம் ரூ.1000 திட்டத்தைஸ நிறுத்தினார்

உங்களுக்கு நேரடியாக கொடுக்கப்பட்ட ஒரே வேலையான நகரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வேலையிலும் ஆளுநர் முற்றிலுமாக தோல்வியடைந்துள்ளீர்கள். டெல்லியில் தினந்தோறும் குழந்தைகள் மற்றும் பெண்கள் கடத்தப்பட்டு தாக்கப்பட்டு வரும் நிலையில், எங்கள் தலைவர்கள்ஜ ஆம் ஆத்மிஸ மீது தினமும் விசாரணை நடத்த பொலிஸாருக்கு உத்தரவுகளை வழங்கி, அர்த்தமற்ற கலங்கத்தை ஏற்படுவதை வேலையாக வைத்துள்ளீர்கள்.

உங்கள் செயல்களால் மக்கள் லெப்டினன்ட் கவர்னர் பதவி மேல் வைத்திருந்த மரியாதையை சீர்குலைத்துள்ளீர்கள். உங்கள் குறுக்குபுத்தி அரசியலை கைவிடுங்கள்.

டெல்லி ஆளுநர் மாளிகை இப்போது பாஜகவின் பினாமி அலுவலகமாக செயல்படுகிறது என்று சாடிய அதிஷி, தற்காலிக முதல்வர் என்ற கருத்து குறித்து எழுதுகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் உண்மையில் தற்காலிகமானவர்கள் மற்றும் காலம் வரை மட்டுமே பதவியில் இருப்பார்கள் என்பது நமது நாட்டின் ஜனநாயகக் கொள்கைகளுக்கு ஒரு சான்று.

ஜனநாயகத்தின் இந்த யதார்த்தத்தை எடுத்துக்காட்டும் எந்தவொரு அறிக்கையையும் நீங்கள் புண்படுத்துவதைக் கண்டிக்கிறேன். இதற்கு பதிலாக டெல்லி மீது கவனம் செலுத்துங்கள் என்று காட்டமாகத் தெரிவித்துள்ளார்

## ராகுல்காந்தி பவுன்சர்போல செயல்படுகிறார் பிரதாப் சந்திர சாரங்கி!




அம்பேத்கரை மத்திய மந்திரி அமித்ஷா அவமதித்ததாக கூறி கடந்த வாரம் நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

பதிலுக்கு பா.ஜ.க. எம்.பி.க்களும் போராட்டத்தில் ஈடுபடடார்கள். இதில் ஒடிசா மாநிலம் பாலசோரைச் சேர்ந்த பா.ஜ.க. எம்.பி. பிரதாப் சந்திர சாரங்கி கீழே விழுந்து காயம் அடைந்தார்.

ராகுல்காந்தி தன்னை கீழே தள்ளியதாக அவர் புகார் கூறியது பரபரப்பை ஏற்படுத்தியது. காயம் அடைந்த பிரதாப் சந்திர சாரங்கி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

இந்தநிலையில் அவர் நிருபர்களிடம் கூறியதாவது முன்பை விட தற்போது நலமாக உள்ளேன். என் தலையில் உள்ள தையல்கள் இன்னும் முழுமையாக குணமடையவில்லை. நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவத்தின்போது திடீரென ராகுல் காந்தி தனது கட்சியினருடன் வந்து முன்நோக்கி தள்ளினார்.

லோக்சபா எதிர்க்கட்சித் தலைவரைப் போல் அல்லாமல் பவுன்சர் போல் நடந்து கொண்டார். ஒரு காலத்தில் வாஜ்பாய் போன்ற பெரியவர்கள் இந்த பதவியில் இருந்திருக்கிறார்கள் என்றார்.




## முடங்கியது IRCTC இணையதளம்.. ஒரே மாதத்தில் 3வது முறை!

ரயில் டிக்கெட் முன்பதிவு செய்யும் இந்திய ரயில்வேயின் ஐ.ஆர்.சி.டி.சி இணையத்தளம் ஒரே மாதத்தில் 3வது முறையாக முடங்கியுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு அதிக வெப் டிராபிக் காரணமாக இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் டூரிசம் கார்ப்பரேஷன் (IRCTC) இணையதளம் மற்றும் மொபைல் செயலி முடங்கிய நிலையில் இதன் டிக்கெட் எடுக்கும் பயணிகள் சிரமத்துக்கு உள்ளாகினர். பல பயனர்கள் இணையதளத்தில் உள்நுழைய முடியவில்லை, மேலும் உள்நுழைய முடிந்தவர்கள் தங்கள் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியவில்லை.

காலை 10 மணிக்கு பயனர்கள் தங்கள் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முயன்றபோது இந்த செயலிழப்பு ஏற்பட்டது. இதனைத்தொடந்து பல பயனர்கள் சமூக ஊடகங்களில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

## ஆந்திராவில் வருகிற 5-ந் திகதி விஷ்வ ஹிந்து பரிஷத் பிரமாண்ட மாநாடு!



ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டம், கன்னவரம் அடுத்த கேசரி பள்ளியில் விஸ்வ இந்து பரிஷத் சார்பில் பிரமாண்ட மாநில மாநாடு வருகிற ஜனவரி 5-ந் திகதி நடைபெறுகிறது. முன்பு எப்போதும் இல்லாத வகையில் மாநாட்டில் 7 லட்சம் பேர் கலந்து கொள்ள உள்ள நிலையில் இதற்காக ஆந்திராவில் உள்ள அனைத்து கிராமங்களிலும் பிரச்சாரம் நடந்து வருகிறது.

மாநிலம் முழுவதிலும் இருந்து பொது மக்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறப்பு பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும் மாநாடு நடைபெறும் இடம் அருகே உள்ள உப்பலூர் ரயில் நிலையத்திற்கு 15 சிறப்பு ரெயில்கள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 7 லட்சம் பேர் கலந்து கொள்ள உள்ளதால் மாநாட்டு மேடை மற்றும் பிரமாண்டமான பந்தல் அமைக்கும் பணி விறுவிறுப்பாக நடந்து வருகின்றன.


பணிகளை விஷ்வ ஹிந்து பரிஷத் மாநில தலைவர் துர்கா பிரசாத், அதோனி எம்.எல்.ஏ பார்த்தசாரதி, பா.ஜ.க ஒருங்கிணைப்பாளர் திலீப் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

# 2024 உலக வலம்!

## 2024 ஆம் ஆண்டில் உலக அளவில் நடந்த மிக முக்கிய நிகழ்வுகள் குறித்த தொகுப்பு....



**ஜனவரி 2:** ஜப்பானின் மேற்கு பகுதியில் இஷிகாவா மாகாணத்தின் வஜிமா நகரை மையமாக கொண்டு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 7.6 புள்ளிகளாக பதிவானது. இதனை தொடர்ந்து 150 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டன. அவை 3.2 ரிக்டர் முதல் 7.5 ரிக்டர் வரை பதிவாகி இருந்தன. சுனாமி எச்சரிக்கையும் விடப்பட்டது. நிலநடுக்கங்களால் இஷிகாவா, நிகாட்டா, டயோமா, யமஹடா உள்ளிட்ட பல மாகாணங்கள் குலுங்கின. ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இந்த நிலநடுக்கத்துக்கு 55 பேர் பலியானார்கள். 100 ற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர்.



**ஜனவரி 21:** உலகின் பெரிய பணக்கார அரசியல்வாதியாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அறிவிக்கப்பட்டார் . அவரது அதிகாரப்பூர்வ ஆண்டு வருமானம் 1.4 லட்சம் டொலர்கள். 2012 ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவின் அதிபராக இருக்கும் புதினின் மொத்த சொத்து மதிப்பு 200 பில்லியன் டொலர்கள்.




**ஜனவரி 29:** போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ள உலக பணக்காரர்கள் பட்டியலில் எலான் மஸ்கை பின்னுக்குத்தள்ளி பிரான்ஸ் நாட்டை சார்ந்த எல்.வி.எம்.எச். குழும தலைவர் பெர்னார்ட் அர்னால்ட் முதலிடம் பிடித்துள்ளார்.



**பெப்ரவரி 8:** பப்புவா நியூ கினியா பிரதமர் ஜேம்ஸ்மாரேபேவுக்கு ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உரையாற்ற அழைப்பு விடப்பட்டது. அதன்படி அரசு முறைப் பயணமாக ஆஸ்திரேலியா சென்ற அவர் அங்குள்ள நாடாளுமன்றத்தில் உரை யாற்றினார். இதன் மூலம் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முதல் பசிபிக் நாடுகளின் தலைவர் என்ற பெருமையை அவர் பெற்றார்.



**பெப்ரவரி 29:** உலகில் அருகிவரும் உயிரினங்களில் ஒன்றாக மீகாங் ஐராவதி என்னும் டால்பின் இனம் உள்ளது. இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் இதனை அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் சேர்த்துள்ளது. இந்த நிலையில் கம்போடியா கடற்கரையில் ஐராவதி இன டால்பின் குட்டி கண்டுபிடிக்கப்பட்டது. இது இந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட 3 ஆவது ஐராவதி டால்பின் குட்டி ஆகும்.



**பெப்ரவரி 29:** ஆபிரிக்க கண்டத்தின் தென்கிழக்கு கடற்கரை பகுதியில் மொரீசியஸ் நாடு அமைந்துள்ளது. தீவு நாடான அங்கு 13 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இதில் 70 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியினர். அதில் தமிழ் வம்சாவளியினர் 6 சதவீதம் பேர். மொரீசியசின் பிரதமராக இந்திய வம்சாவளியை சார்ந்த பிரவிந்த் ஜுக்நாத் பதவி வகிக்கிறார். இதன் காரணமாக இந்தியா - மொரீசியஸ் இடையே நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. இந்த நிலையில் இந்தியாவின் உதவியுடன் மொரீசியசின் அகலேகா தீவில் புதிய விமானத் தளம் அமைக்கப்பட்டுள்ளது.




**மார்ச் 5:** அமெரிக்காவின் சான பிரான்சிஸ்கோவில் 1907 ஆம் ஆண்டு பிறந்தவர் மரியா பிரன்யாஸ். இவர் 2 ஆம் உலகப் போர், புளூ காய்ச்சல் மற்றும் கோவிட் தொற்று போன்ற பல்வேறு சவால்களை கடந்து தற்போது உலகின் வயதான மனிதராக அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர், மார்ச் 4 ஆம் தேதி தனது 117 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இதன்மூலம் உலகின் அதிக வயதானவராக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.



**மார்ச் 7:** நேட்டோ உறுப்பு நாடுகளான துருக்கி மற்றும் ஹங்கேரி நாடுகள் ஆண்டின் தொடக்கத்தில், சுவீடன் நேட்டோவில் இணைய சம்மதம் தெரிவித்தன. இதனையடுத்து தற்போது, நேட்டோவில் 32 ஆவது நாடாக சுவீடன் இணைந்தது .



**மார்ச் 9:** பாகிஸ்தானில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இணைந்து கூட்டணி அரசை அமைத்தன. இதில் ஷபாஸ் ஷெரீப் 2 ஆவது முறையாகப் பிரதமராக பதவியேற்றார். இந்த நிலையில் பாகிஸ்தானின் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் வெற்றி பெற்று ஆசிப் அலி சர்தாரி 2 ஆவது முறையாக அதிபராகத் தேர்வானார். பாகிஸ்தான் வரலாற்றில் ஒருவர் 2 ஆவது முறையாக அதிபராக தேர்வு செய்யப்படுவது இதுவே முதல்முறை ஆகும்.



**மார்ச் 30:** உலகின் முன்னணி விமான தயாரிப்பு நிறுவனமான 'போயிங்' உடன் 5 ஆயிரம் கோடி மதிப்புள்ள ஒப்பந்தத்தில் அமெரிக்க கடற்படை கையெழுத்திட்டது. இதன்மூலம் எம்.கியூ-25 ஸ்டிங்ரே என்கிற வான்வழி எரிபொருள் நிரப்பும் டிரோன்களை அந்த நிறுவனத்திடம் இருந்து அமெரிக்கா வாங்கியது . இந்த பணிகள் வருகிற 2028 ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்ப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



**ஏப்ரல் 3:** உலக பெரும் பணக்காரர்களின் பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டது. இந்த தரவரிசையில், லூயி உட்டான் நிறுவனத்தின் தலைவர் பெர்னார்ட் அர்னால்ட் முதலிடம் பிடித்துள்ளார். இவரின் சொத்து மதிப்பு 233 பில்லியன் டொலராகும். இந்தியாவின் முகேஷ் அம்பானி 9 ஆவது இடத்திலும், கவுதம் அதானி 17 ஆவது இடத்திலும் உள்ளனர்.



**ஏப்ரல் 11:** உலகில் உள்ள 100 நாடுகளில் நடை பெறும் பல்வேறு வகையான இணையவழி குற்றங்கள் தொடர்பாக 'உலக இணைய குற்ற குறியீடு' என்ற ஆய்வறிக்கையை சர்வதேச ஆராய்ச்சி குழுவினர் வெளியிட்டனர். அதில் உலகளவில் இணைய வழி குற்றங்கள் அதிகம் நடைபெறும் நாடுகளில் ரஷ்யா முதலிடத்தில் உள்ளது. இந்தியா 10 ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் இணையவழியில் முன்பணம் செலுத்தினால் அதிக பரிசுத்தொகை கிடைக்கும் என பொதுமக்கள் ஏமாறும் மோசடிகளே அதிகளவு நடைபெறுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**ஏப்ரல் 24:** கடந்த 2023-ம் ஆண்டில், இராணுவக் கட்டமைப்புக்கு உலக அளவில் 2 ஆயிரத்து 443 பில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக, சுவீடனை சேர்ந்த ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை வெளியிட்டது. அதில், இராணுவத்துக்கு அதிகம் செலவிடும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்திலும், சீனா 2 ஆம் இடத்திலும், ரஷ்யா 3 ஆம் இடத்திலும், இந்தியா 4 ஆவது இடத்திலும் உள்ளன.

(8ஆம் பக்கம் பார்க்க....)

# கேரள செவிலியரின் மரண தண்டனையை உறுதி செய்த ஏமன் ஜனாதிபதி





கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டம் கொல்லங்கோடு பகுதியை சேர்ந்தவர் நிமிஷா பிரியா (வயது36). இவர் தெற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் கடந்த 2011-ம் ஆண்டு முதல் செவிலியராக பணிபுரிந்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 2017-ம் ஆண்டு அந்த நாட்டை சேர்ந்த தலால் அபு மஹதி என்பவரை மயக்க மருந்து செலுத்தி கொன்றதாக நிமிஷா பிரியா கைது செய்யப்பட்டார். அவருக்கு அந்த வழக்கில் 2018-ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து அவர் அங்குள்ள சிறையில் அடைக்கப்பட்டார். நிமிஷா பிரியாவை மீட்டு சொந்த ஊருக்கு அழைத்து வரும் நடவடிக்கையில் அவரது தாய் பிரேமா மேரி ஈடுபட்டார்.

இதற்கிடையே தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து ஏமன் நாட்டு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை ஏமன் நாட்டு உச்சநீதிமன்றம் நிராகரித்த நிலையில் நிமிஷாவின் மரண தண்டனையை நிறைவேற்ற ஏமன் ஜனாதிபதி ரஷாத் அல்-அலிமி ஒப்புதல் அளித்துள்ளார். தண்டனை இன்னும் ஒரு மாதத்தில் நிறைவேற்றப்படும் என்றே தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இந்திய வெளியுறவுத் துறை இன்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையில், திருமதி நிமிஷா பிரியாவுக்கு ஏமனில் மரண தண்டனை விதிக்கப்பட்டதை நாங்கள் அறிவோம். பிரியாவின் குடும்பத்தினர் நிலைமையை புரிந்துகொள்கிறோம். இந்த விடயத்தில் மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நிமிஷா பிரியாவின் தாய் குமாரி ஏமன் சென்று, தலைநகர் சனாவில் தங்கி, கொலை செய்யப்பட்ட மஹ்தியின் குடும்பத்தினருடன் இழப்பீட்டுத் தொகை ஜடிடழுழன அழநெலஸ குறித்து பேச்சுவார்த்தை நடத்த முயன்றார். பாதிக்கப்ட்ட குடும்பம் பணத்தை ஏற்றுக்கொண்டு சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் தண்டனை குறைக்கப்படும் அல்லது இரத்து செய்யப்படும்.

இது ஏமனில் ஒரு பாரம்பரிய நடைமுறையாக பின்பற்றப்பட்டுவரும் நிலையில் நிமிஷா விஷயத்தில்பேச்சுவார்த்தை முயற்சிகள் பின்னடைவைச் சந்தித்துள்ளது. தற்போது மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது நிமிஷா குடும்பத்துக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒவ்வொரு நொடிக்கும் 2 பேர் இறப்பார்கள் புத்தாண்டில் உலக மக்கள் தொகை இவ்வளவுதான்!



உலக மக்கள் தொகை நாளை, 2025 புத்தாண்டு தினத்தில் ஜஜனவரி 1ஸ 8.09 பில்லியனாக ஜ809 கோடியாகஸ இருக்கும் என்று அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்புத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

நேற்று ஜதிங்களன்றுஸ வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில், 2024 ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகை 71 மில்லியன்ஜ7 கோடிஸ உயர்ந்துள்ளது . 2023 ஆம் ஆண்டில் 75 மில்லியன் மக்கள் உயர்ந்த நிலையில் இந்த வருடம் ஜ2024ஸ மக்கள் தொகை உயர்வு 0.9மூ குறைவாக உள்ளது.

மேலும் 2025 ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு நொடிக்கும் சராசரியாக 4.2 குழந்தைகள் பிறக்கும் என்றும் 2 பேர் இறப்பார்கள் என்று அந்த அறிக்கை கூறுகிறது. மேலும் அமெரிக்காவைப் பொறுத்தவரை புத்தாண்டு தினத்தில் அமெரிக்க மக்கள் தொகை 341 மில்லியனாக இருக்கும். ஜனவரி 2025 இல் இருந்து அமெரிக்காவில் ஒவ்வொரு 9 வினாடிக்கும் ஒரு பிறப்பும், ஒவ்வொரு 9.4 வினாடிக்கும் ஒரு இறப்பும் ஏற்படும்.

வெளிநாடுகளில் இருந்து குடியேற்றங்கள் அதிகரித்துள்ளதால் ஒவ்வொரு 23.2 நொடிக்கும் அமெரிக்க மக்கள் தொகையில் ஒருவர் கூடுதலாக சேர்வர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாலியல் வன்கொடுமை வழக்கால் பின்னடைவை சந்திக்கும் அமெரிக்க அதிபர் டிரம்ப்!



அமெரிக்காவில் கடந்த மாதம் நடந்த அதிபர் தேர்தலில் டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றதையடுத்து அவர் அடுத்த மாதம் (ஜனவரி) 20-ந்தேதி அதிபராக பதவி ஏற்க உள்ளார். இவர் மீது ஏற்கனவே பாலியல் உள்ளிட்ட பல வழக்குகள் உள்ளது.

அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவருக்கு எதிரான 2 வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் கடந்த 1996-ம் ஆண்டு நியூயார்க்கில் உள்ள ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோர் ஒன்றில் டிரம்ப் தன்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என பெண் எழுத்தாளர் ஜீன் கரோல் வழக்கு பதிவு செய்திருந்தார்.

டிரம்புக்கு எதிராக அவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் அவதூறு வழக்கினை தொடர்ந்தார். ஆனால் இந்த குற்றச்சாட்டினை டிரம்ப் முற்றிலும் மறுத்து வந்தார்.

இந்த வழக்கில் அவர் நீதிமனறத்தில் ஆஜராகாமல் இருந்தார். இந்த வழக்கை விசாரித்த மன்ஹாட்டன் நீதிமன்றம் டிரம்புக்கு ரூ.42 கோடி அபராதம் விதித்து தீர்ப்பு கூறியது.

இந்த தீர்ப்பை எதிர்த்து டிரம்ப் நியூயார்க் பெடரல் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனுதாக்கல் செய்தார். இதனை 3 நீதிபதிகள் கொண்ட குழு விசாரித்து இதில் மன்ஹாட்டன் நீதிமன்றம் விதித்த ரூ.42 கோடி அபராதத்தை பெடரல் நீதிமன்றம் உறுதி செய்தது.

அடுத்த மாதம் அதிபராக பதவி ஏற்க இருக்கும் சூழ்நிலையில் டிரம்புக்கு எதிராக வந்துள்ள இந்த தீர்ப்பு அவருக்கு பின்னடைவாக பார்க்கப்படுவதாக அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

## தென் கொரிய விமான விபத்து இருவர் மட்டும் உயிர் தப்பியது எப்படி?



தென் கொரியாவில் உள்ள முவான் சர்வதேச விமான நிலையத்தில் விமானம் ஒன்று ஓடுபாதையில் இருந்து விலகி தரையில் மோதியதில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சிக்கி இதுவரை 179 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், இது தென் கொரியாவில் ஏற்பட்ட மிக கோரமான விமான விபத்தாக மாறி இருக்கிறது.

தாய்லாந்தில் இருந்து தென் கொரியாவுக்கு திரும்பிய இந்த விமானத்தில் 175 பயணிகள், ஆறு பணியாளர்கள் உள்பட மொத்தம் 181 பேர் இருந்தனர். இந்த விமானம் விபத்தில் சிக்கியதில் 179 பேர் உயிரிழந்த நிலையில், இருவர் மட்டும் உயிர் பிழைத்ததாக தகவல்கள் வெளியானது.

தற்போது விபத்தில் சிக்கிய இருவர் மட்டும் உயிர் பிழைத்தது எப்படி என தெரியவந்துள்ளது. அதன்படி விபத்தில் சிக்கிய விமானத்தில் இருந்த இருவர் விமானத்தின் கடைசி பகுதியில் அமர்ந்து இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வர்த்தக ரீதியிலான விமானங்களின் கடைசி பகுதி மிகவும் பாதுகாப்பான ஒன்றாக அறியப்படுகிறது.

2015 ஆம் ஆண்டு டைம் இதழ் சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் விபத்தில் சிக்கும் விமானங்களில் மிகவும் பாதுகாப்பான பகுதியாக அதன் பின்புறம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தென் கொரிய விமான விபத்தில் உயிர்பிழைத்த இருவர்- 32 வயதான லீ மற்றும் 25 வயதான வொன் என்பது குறிப்பிடத்தக்கது.

## இடைநீக்கம் செய்யப்பட்ட தென் கொரிய அதிபருக்கு கைது உத்தரவு பிறப்பித்துள்ள நீதிமன்றம்!



தென் கொரிய அதிபர் யூன் சுக் இயோலுக்கான கைது உத்தரவிற்கு அந் நாட்டு நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது என விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி இராணுவ சட்டத்தை விதிப்பதற்கான தனது முடிவை யூன் சுக் அறிவித்த நிலையில், அவர் அதிபர் பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து அவர்மீது அந்நாட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. அதன் தொடர்ச்சியாகவே அவருக்கு கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதனை நீதிமன்றமும் தற்போது உறுதிப்படுத்தி இருக்கிறது.

இந்நிலையில் கைது உத்தரவு உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதை உயர் அதிகாரிகளுக்கான ஊழல் விசாரணை அலுவலகம் உறுதிப்படுத்தி இருக்கிறது. இதற்கான உத்தரவை சியோல் மேற்கு மாவட்ட நீதிமன்றம் வழங்கியுள்ளதாகவும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

"தமிழரசுக் கட்சி பிரதான கட்சியாக உள்ளமையால் அந்தக் கட்சியைத் தவிர்த்து தமிழினம் முன்செல்ல முடியாது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பைச் சரியா-கப் புரிந்துகொண்டு, மக்களால் நிராக ரிக்கப்பட்ட ஒரு சிலரின் ஆதிக்கத்தைக் கட்சி தொடர்ந்தும் அனுமதிப்பதன் ஊடாகத் தொடர்ந்தும் ஒரு மோசமான கொள்கை ரீதியான பாதையில் தமிழ்த் தேசிய அரசியலைத் தள்ளும். (ஐ)

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளம் தடுப்பு முகாமாக செவ்வாய்க் கிழமை முதல் இயங்கவுள்ளது.

கடற்படையினரால் அண்மையில் மீட்கப்பட்ட 103 மியான்மர் அகதிகள் முல்லைத்தீவில் உள்ள விமானப்படை முகாமுக்கு தற்காலிக காவலில் வை-க்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுக்கமைய மிரிஹான தடுப்பு முகாமில் தங்க வை-க்கப்பட்டிருந்த போதிலும், மிரிஹான தடுப்பு முகாமில் போதிய தங்குமிட வசதிகள் இல்லாததால், இந்த அகதி-களை முல்லைத்தீவு விமானப்படைத் தளத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க பட்டது. (ஐ)

## எலிக்காய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகம் முன்னெடுத்து வரு கின்றது.

இதற்கிணங்க அட்டாளச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலு-வலகத்துடன் பாலமுனை விவசாய அபிவிருத்தி நிலையம் மற்றும் கமநல சேவை நிலையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நடைபவனி செவ்வாய்க்கிழமை அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி வைத்-தியர் ஏ.எம். இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் விவசாய அபிவிருத்தி நிலையம் மற்றும் கமநல சேவை நிலை-யம் என்பவற்றின் உத்தியோகத்தர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோ-கத்தர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## சிகரெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3:50 மணிக்கு இந்தியாவின் பெங்களூரில் இருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்தில் (6E-1164) கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்த டைந்தார்.

சந்தேக நபர் ஐந்து பயணப் பைகளு-க்குள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட சிகரெட் பிராண்டுகளை மறைத்து வைத்திருந்-ததை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மேலும், அதே பொதியில் 125 போத்தல்கள் இறக்குமதி செய்யப்பட்ட மது வகைகளும் மறைத்து வைக கப்பட்டிருந்தன. இதேவேளை, எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் இலங்கையின் பல்வேறு மாகாணங்களில் உள்ள மதுபானக் கடைகள் மற்றும் உணவ-கங்களில் இந்தப் பொருட்கள் விற்பனை செய்யப்படவிருந்தன.

சட்டவிரோதமான முறையில் பொ-ருட்களை இறக்குமதி செய்ததாக வர்த்தகர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், அவர் இன்று மகொன நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸ் பொறுப்பதி-காரியின் மேற்பார்வை மற்றும் வழி காட்டலின் கீழ் சம்பவம் குறித்த மேல-திக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

## மாணவனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.

விஜய புர பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ஒருவரும், ஹிடோகம பஹல் தருவில பிரதேசத்தை சேர்ந்த 35 வயதான ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் வகுப்புகள் முடிந்ததும் அநுராதபுரம் புதிய நகரில் பஸ்ஸுக்காக காத்திருந்த 18 வயதுடைய மாணவன் அருகில் காரில் வந்த நின்றுள்ளது. அதில் இருந்த நான்கு பேர் கத்தியைக் காட்டி மாணவனை, காருக்குள் பலவந்தமாக ஏற்றிக்கொண்டு, ஆள் நடமாட்டமற்ற இடத்திற்கு அழைத்துச் சென்று, அவரிடமிருந்த 2000 ரூபாய் பணத்தை அபகரித்ததுடன், வங்கி அட்டையையும் கைப்பற்றினர். .

அதன்பின்னர், வங்கி தன்னி யக்க இயந்திரம் இருக்கும் இடத்துக்கு சென்றவர்கள், அந்த மாணவனை அச்சுறுத்தி, இரகசிய இலக்கத்தை கேட்டு, வங்கி அட்டையில் இருந்து 65000 ரூபாவை வலுக்கட்டாயமாக எடுத்துக்கொண்டு, மாணவனை சிறிது தூரத்தில் இறக்கிவிட்டுவிட்டு காருடன் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

## தூய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து உயிர் நீத்தவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர், 09.00 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் இருந்து நேரலை வாயிலாக "க்ளீன் ஸ்ரீலங்கா" செயற்றிட்டத்தின் அங்கு ரார்ப்பண நிகழ்வு இடம்பெறும். இதனை நேரடியாகத் தமது பணியாளர்கள் பார்வையிடுவதற்கான வசதிகளை ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்-திலும் செய்தல் வேண்டும் என்பதுடன் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறும் "க்ளீன் ஸ்ரீலங்கா" சத்தியப்பிரமாண உறுதியுரையைச் செய்ய வேண்டும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-12)

## இலங்கை ரூபாவின் பெறுமதியில் பதிவான மாற்றம்

கொழும்பு, டிச. 31

இலங்கை மத்திய வங்கி (ஊடுளுடு) இன்றைய நாளுக்கான நாணய மாற்று விகிதங்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 288.32 ரூபாவாகவும் விற்பனைப் பெறுமதி 297.01 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 360.46 ரூபாவாகவும் விற்பனைப் பெறுமதி 374.43 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது

இதேவேளை, யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 298.41 ரூபாவா-கவும் விற்பனைப் பெறுமதி 310.94 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 199.61 ரூபாவா-கவும் விற்பனைப் பெறுமதி 208.29 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 177.40 ரூபாவா-கவும் விற்பனைப் பெறுமதி 186.84 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 210.40 ரூபாவா-கவும் விற்பனைப் பெறுமதி 220.27 ரூபாவாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# டின் மீன்களை நிர்ணய விலைக்கு விற்க வேண்டும்

கொழும்பு, டிச. 31

டின் மீன்களுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் முன், சந்தைக்கு அனுப்பப்படும் உள்நாட்டு டின் மீன்களை தற்போதைய அதிகபட்ச சில்லறை விலையில் விற்க வேண்டும் என்றும், இறக்குமதி செய்யப்பட்ட டின் மீன்களை பழைய விலையில் விற்கலாம் என்றும் நுகர்வோர் விவகார அதிகா-ர சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதிகபட்ச சில்லறை விலையை விட அதிக விலையில் டின் மீன்களை விற்கும் வர்த்தக நிலையங்களை தொடர்ந்து கண்காணித்து வருவதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ஐ)

# அதிகாரிகளுக்கு பரிசுகளை வழங்க வேண்டாம்

கொழும்பு, டிச. 31

புத்தாண்டு மற்றும் விசேட சந்-தர்ப்பங்களில் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இலங்கை பொலிஸ் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு பரிசுப் பொதிகளை வழங்கும் பாரம்பரியம் தொடர்பாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

சில பொலிஸ் அதிகாரிகள் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மூத்த அதிகாரிகளுக்கு விசேட பரிசுப் பொதிகளை வழங்குவ-துடன் இந்த நடைமுறையை சில மூத்த அதிகாரிகளும் ஏற்றுக்கொள்வதை சுற்றறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

எவ்வாறாயினும், பொறுப்பு அதிகாரி மற்றும் சிவில் நிர்வாக அதிகாரிகளுக்கு மேல் உள்ள ஐபீ உட்பட எந்தவொரு மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கும், எந்த அதிகாரியும் பரிசுப் பொதிகளை வழங்கக்கூடாது அல்லது மூத்த அதிகா-ரிகள் அவற்றை ஏற்கக்கூடாது என்று பதில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்-தியுள்ளார்.

ஒரு அதிகாரி ஐஜிபி அல்லது பிற மூத்த அதிகாரிகளிடம் ஆசிர்வாதம் அல்லது பாராட்டுக்களை கோரும் சந்-தர்ப்பங்களில், நேரில் சந்திக்க வேண்டிய அவசியமில்லை என்று செயல் ஐஜிபி வலியுறுத்துகிறார்.

நல்லெண்ணத்தின் இத்தகை-கய பரிமாற்றங்களை தொலைபேசி அழைப்புகள் அல்லது வட்ஸ்அப் செய்-திகள் மூலம் தெரிவிக்கலாம்.

இந்த அறிவுறுத்தல்கள் இலங்கை பொலிஸில் கடமையாற்றும் சிவில் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்-தும் என பதில் பொலிஸ் மா அதிபர் தெளிவுபடுத்தினார்.

மேலும், இந்த அறிவுறுத்தல்கள் குறித்து தங்கள் மேற்பார்வையின் கீழ் உள்ள அனைத்து சம்பந்தப்பட்ட அதி-காரிகளுக்கும் தெரிவிக்குமாறு மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு பதில் ஐஜிபி உத்தரவிட்டுள்ளார்.

அறிவுறுத்தல்களை மீறும் எந்தவொரு அதிகாரி மீதும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், கண்காணிப்பு அலுவலர்கள் இணக்கத்தை உறுதிசெய்ய பொறு-ப்புக்கூற வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ)

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய நடவடிக்கை

கொழும்பு, டிச. 31

பிங்கிரிய பிரதேசத்தில் உள்ள தனி-யார் ஆடைத் தொழிற்சாலைக்கு நேற்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான விஜேசிறி பஸ்நாயக்க மற்றும் அஜித் கிஹான் ஆகியோர் விஜயம் செய்த போது அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பா-ட்டத்தில் பங்கேற்றவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் எட்டு சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொ-லிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொ-லிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான விஜேசிறி பஸ்நாயக்க மற்றும் அஜித் கிஹான் ஆகியோர் ஆடைத்தொழி-ற்சாலைக்கு விஜயம் செய்த போது கப்பம் பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்ட வீடியோ காட்சிகள் வெளிவந்ததை அடுத்து இந்த கைது இடம்பெற்றுள்ளது.

எம்.பி.க்கள் தொழிற்சாலைக்கு வந்தவுடன் அவர்கள் கப்பம் பெற்ற-தாக குற்றஞ்சாட்டி ஒரு குழுவினர் அவர்களுக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை, ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் நளின் பண்டார பகிர்ந்த காணொளி காட்டுகிறது.

முன்னதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலுக்காக தொழிற்சா-லைக்கு சென்றிருந்ததாகவும், ஆனால் அவர்கள் வளாகத்தை விட்டு வெளியே-றும் போது ஒரு குழுவினர் தவறாக நடந்து கொண்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க தெரிவித்தார்.

"நாடாளுமன்ற உறுப்பினர்" என்ற முத்திரையுடன் கூடிய ஜீப்பை போரா-ட்டக் குழுவினர் மறித்து, மற்றொரு வேனை தாக்குவதையும் வீடியோ காட்சிகள் காட்டுகிறது.

தற்போது ஆடைத்தொழிற்சா-லையின் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ரீ யுடன் தொடர்புடைய நபர்கள், தற்போதுள்ள குழுவை அகற்றி போக்குவரத்து நடவடிக்கைகளை முழு-மையாகக் கட்டுப்படுத்த முயற்சிப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்தனர்.

"பலர் இந்த வாகனங்களை நிதிக் கடன்களின் கீழ் இயக்குகிறார்கள். இந்த குழு அவர்கள் அனைவரையும் அகற்றி அவர்களின் வாகனங்களைப் பெற முயற்சிக்கிறது. இது அவர்களின் அரசாங்கம் என்பதால் நாங்கள் இதைச் செய்கிறோம் என்று அவர்கள் கூறுகி-றார்கள்.

அவர்கள் எங்களை வெளியே-றச் சொல்கிறார்கள். இதற்கு முன் இவ்வாறான பல கோரிக்கைகளை நாங்கள் ஏற்காததால், அவர்கள் ஆதிக்கம் செலுத்த தொழிற்சாலைக்கு வரத் தொடங்கியுள்ளனர்" என்று போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டினர்.

தோற்கடிக்கப்பட்ட அரசியல்வாதி-களுடன் தொடர்புடைய கப்பம் பெறும் கும்பலை அகற்றுமாறு தம்மிடம் அவர்கள் கோரிக்கை விடுத்ததாக கூறிய பிரதிநிதிகள் மேற்குறித்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ளனர்.

(ஐ)

# 2024.......... (தொடர்ச்சி)



**ஏப்ரல் 27:** உலக அளவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் பிரபஞ்ச அழகிப் போட்டிகளில் 18 முதல் 28 வயது வரையிலான இளம்பெண்கள் மட்டுமே பங்கேற்க முடியும். கடந்த ஆண்டு இந்த வயது வரம்பை பிரபஞ்ச அழகிப்போட்டி அமைப்பு நீக்கியது. இந்த நிலையில் அர்ஜென்டினாவில் பிரபஞ்ச அழகிப்போட்டி நடைபெற்றது. அதில் அலஜாண்டிரா மரிசா ரோட்ரிக்ஸ் என்ற 60 வயது பெண் வெற்றி பெற்று அசத்தினார். இதன்மூலம் அழகிப்போட்டியில் அதிக வயதில் பட்டம் வென்றவர் என்ற சாதனையையும் அவர் படைத்தார்.

**மே 3:** டென்மார்க் நாட்டில் 50 ஆண்டுகளுக்கு பிறகு கருக்கலைப்பு சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டு, 18 வாரங்கள் வரையுள்ள கருவை கலைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. இதற்கு முன்பு 12 வாரங்கள் வரையுள்ள கருவை மட்டுமே கலைக்க முடியும் என்று இருந்தது குறிப்பிடத்தக்கது.



**மே 11:** ஐ.நா. சபையில் உறுப்பினராக சேர பாலஸ்தீனம் நீண்ட காலமாகவே கோரிக்கை விடுத்து வருகிறது. இந்த நிலையில் பாலஸ்தீனத்துக்கு உறுப்பினர் அந்தஸ்து அளிக்கும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெற்றது. 193 உறுப்பு நாடுகளில், 143 நாடுகள் இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் ஆதரவு அளித்ததால் இந்த தீர்மானம் ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்டது.



**மே 20:** ஈரான் அதிபர் இப்ராஹிம் ரைசி மேற்கு அஜர்பைஜானில் நடைபெற்ற அணைக்கட்டு திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு ஹெலிகாப்டரில் திரும்பும்போது விபத்தில் சிக்கி உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து ஈரானின் இடைக்கால அதிபராக அந்நாட்டின் துணை அதிபராக இருந்த முகமது மொக்பர் தேர்வு செய்யப்பட்டார்.



**ஜூன் 12:** காங்கோவின் புதிய பிரதமராக ஜூடித் சுமின்வாதுலுக்கா தேர்ந்தெடுக்கப்பட் டார். காங்கோ நாட்டின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை ஜூடித் சுமின்வாதுலுக்கா பெற்றார்.



**ஜூன் 15:** தென் ஆபிரிக்காவில் கடந்த மாதம் நடந்த நாடாளுமன்ற தேர்தலில், ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கட்சி 40 சதவீத இடங்களை மட்டுமே பெற்றது. ஆட்சியமைக்க தேவையான பெரும்பான்மை கிடைக்காததால் மற்ற கட்சிகளின் ஆதரவுடன் புதிய அதிபராக மீண்டும் சிறில் ராமபோசா தேர்ந்தெடுக்கப்பட்டார்.



**ஜூலை 6:** ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி ஹெலிகாப்டர் விபத்தில் மரணம் அடைந்த பின்பு நடத்தப்பட்ட அதிபர் தேர்தலில் முன்னாள் நிதி மந்திரி மசூத் பெசெஸ்கியன் 53.70 சதவீத வாக்குகளை பெற்று வெற்றி பெற்று ஈரானின் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.




**ஜூலை 16:** அமெரிக்காவில் பொதுத்தேர்தலை முன்னிட்டு, குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டார். மேலும் அந்த கடசியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக ஜேம்ஸ் டேவிட் வென்சி தேர்வு செய்யப்பட்டார்.



**ஜூலை 29:** தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் ஆளுங்கட்சி சார்பில் போட்டியிட்ட பிரதமர் நிகோலஸ் மதுரோ 53.67 சதவீத வாக்குகளை பெற்று மீண்டும் அதிபராக தேர்வு செய்யப்பட்டார்.



**ஜூலை 30:** இந்தியா வயநாட்டு மலைப்பகுதியில் அமைந்துள்ள சூரல்மலை, முண்டக்கை பகுதிகளில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி, 300க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.



**ஒகஸ்ட் 7:** பாலஸ்தீனத்தின் காசா முனையில் செயற்பட்டு வரும் ஹமாஸ் அமைப்புக்கு தலைவராக இருந்த இஸ்மாயில் ஹனியே இஸ்ரேல் தாக்குதலில் உயிரிழந்ததும், ஹமாஸ் அமைப்பின் புதிய தலைவராக யாயா சின்வார் நியமிக்கப்பட்டார்.



**ஒகஸ்ட் 8:** வங்காளதேசத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக வெடித்தது, பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை ராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறினார். இந்த நிலையில் நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணரான முகமது யூனுஸ் இடைக்கால அரசின் தலைவராக பதவியேற்றார்.



**ஒகஸ்ட் 22:** ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான போட்ஸ்வானா, வைர உற்பத்தியில் முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இந்நாட்டின் கரோவே நகரில் உள்ள வைர சுரங்கத்தில் 2 ஆயிரத்து 492 கேரட் எடையுள்ள மிகப்பெரிய வைரம் கண்டுபிடிக்கப்பட்டது. இது போட்ஸ்வானாவில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய வைரம் ஆகும். மேலும் உலகின் 2 ஆவது பெரிய வைரம் என்ற பெருமையையும் பெற்றது.

**ஒகஸ்ட் 27:** கட்டார் மற்றும் குவைத் இடையே இயற்கை எரிவாயு தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்மூலம் அடுத்த 15 ஆண்டுகளுக்கு சுமார் 30 லட்சம் டன் வரையிலான இயற்கை எரிவாயுவை குவைத்துக்கு கட்டார் வழங்க உள்ளது.

**செப்டம்பர் 6:** பிரான்ஸ் நாட்டின் புதிய பிரதமராக மைக்கேல் பார்னியரை அதிபர் இம்மானுவேல் மேக்ரான் நியமித்தார். நாட்டின் மிகவும் வயதான பிரதமர் என்ற பெருமையை மைக்கேல் பார்னியர் பெற்றார்.



**செப்டம்பர் 22:** இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி முன்னணி தலைவர் அனுர குமார திசநாயக்கா வெற்றி பெற்று புதிய ஜனாதிபதியாகத் தேர்வானார். இதன்மூலம் நாட்டின் 9 ஆவது மற்றும் முதல் இடதுசாரி ஜனாதிபதி என்ற பெருமையை இவர் பெற்றார். இதனையடுத்து இலங்கையின் புதிய பிரதமராக ஹரினி அமரசூரியா நியமிக்கப்பட்டார்.

**செப்டம்பர் 27:** சிங்கப்பூரில் நடத்தப்பட்ட மக்கள தொகை கணக்கெடுப்பில், முதன்முறையாக 60 லட்சம் மக்கள்தொகையை கடந்ததாக சிங்கப்பூர் அரசு தெரிவித்தது. அதில் 10 லட்சத்து 84 ஆயிரம் பேர் வெளிநாட்டு வம்சாவளியை சேர்ந்தவர்கள்.

**ஒக்ரோபர் 6:** ரஷ்ய தலைநகர் மோஸ்கோவில் நடைபெற்ற 'மிஸ் ரஷ்யா-2024' அழகி போட்டியில் வாலன்டினா அலெக்ஸியேவா பட்டம் வென்றார். இதனால், இந்த ஆண்டில் நடைபெற உள்ள 'உலக அழகி' போட்டியில் ரஷ்யா சார்பில் இவர் பங்கேற்க உள்ளார்.

**ஒக்ரோபர் 9:** மஹாராஷ்டிராவின் மும்பையில் வசித்து வந்த பிரபல தொழிலதிபரும், டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான ரத்தன் டாடா(86) உடல்நலக்குறைவால், காலமானார்.

**ஒக்ரோபர் 20:** இந்தோனேசியாவின் 8 ஆவது அதிபராக பிரபோவோ சுபியாந்தோ பதவியேற்று கொண்டார். துணை அதிபராக ஜிப்ரான் ரகாபுமிங் ராக்கா பதவியேற்றார்.

**ஒக்ரோபர் 29:** லெபனான் நாட்டின் சக்தி வாய்ந்த ஆயுத குழுவான ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவராக இருந்த ஹஸன் நஸ்ரல்லா கொல்லப்பட்ட பின்னர் புதிய தலைவராக மதகுரு நயீம் காஸிம் நியமிக்கப்பட்டார்.

**நவம்பர் 6:** அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் மொத்தம் 50 மாகாணங்களில் உள்ள 538 தேர்தல் பிரதிநிதிகள் 312 வாக்குகளைப் பெற்று குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் 226 வாக்குகளை பெற்றார்.

**நவம்பர் 6:** 67ஆவது கோமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு ஆஸ்திரேலிய நாட்டின் சிட்னி நகரில் நடைபெற்றது. அதில் 'நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைகளில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள், வாய்ப்புகள் மற்றும் சவால்கள்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

**நவம்பர் 11:** தாய்லாந்து நாட்டு சுற்றுலாத்துறையின் அதிகாரப்பூர்வ விளம்பர தூதராகவும், ஆலோசகராகவும் நடிகர் சோனு சூட் நியமிக்கப்பட்டார்.

**நவம்பர் 12:** 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரபஞ்ச அழகி போட்டி தென் ஆபிரிக்காவின் கிம்பர்லி நகரில் நடைபெற்றது. அதில் ஒடிசாவை சேர்ந்த திரிஷ்னா ரே என்ற கல்லூரி மாணவி வெற்றி பெற்று மகுடம் சூடினார்.

**நவம்பர் 17:** அரசுமுறை பயணமாக நைஜீரியா சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்நாட்டின் 2ஆவது உயரிய விருதான 'கிராண்ட் கமாண்டர் ஒப் தி ஓர்டர் ஒப் தி நைஜர்' விருது வழங்கப்பட்டது. இந்த விருது பெறும் 2 ஆவது வெளிநாட்டு தலைவர் பிரதமர் மோடி ஆவார். இதற்கு முன்பு 1969 ஆம் ஆண்டு இங்கிலாந்து ராணி எலிசபெத்துக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

**நவம்பர் 21:** 2 ஆவது இந்தியா-கேரிகோம் உச்சி மாநாடு கயானா நாட்டின் ஜார்ஜ்டவுன் நகரில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட பிரதமர் மோடிக்கு, கயானா நாட்டின் உயரிய விருதான 'தி ஆர்டர் ஆப் எக்சலன்ஸ்' வழங்கப்பட்டது. கேரிகோம் அமைப்பு கரீபிய பகுதியில் உள்ள 20 வளரும் நாடுகளை கொண்ட அமைப்பு ஆகும்.

**டிசம்பர் 1:** அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ.யின் இயக்குனராக இந்திய வம்சாவளியை சேர்ந்த காஷ் படேலை புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப் நியமித்துள்ளார். தற்போது எப்.பி.ஐ.யின் இயக்குனராக கிறிஸ்டோபர் ரே உள்ளார்.

**டிசம்பர் 1:** ரஷ்யாவில் 2025 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் இராணுவம், பாதுகாப்புக்கு 12.30 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டது. இது மொத்த பட்ஜெட்டில் 32.5 சதவீதம் ஆகும். இது இந்த ஆண்டுக்கான இராணுவ நிதியைக் காட்டிலும் 28 சதவீதம் அதிகமாகும்.

**டிசம்பர் 12:** சிங்கப்பூரில் நடந்த உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில், நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரென்னை வீழ்த்தி இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ் வெற்றி பெற்றார். இதன் மூலம் 18 வயதிலேயே உலக செஸ் சாம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார்.

**டிசம்பர் 25:** அஜர்பைஜான் தலைநகர் பாகுவிலிருந்து செச்சென் தலைநகர் க்ரோஸ்னிக்கு சென்று கொண்டிருந்த, து2-8243 என்ற விமானம் தீ பிடித்தது, அதனை தொடர்ந்து விமானம், கஜகஸ்தானின் அக்டாவ் அருகே விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 67 பேரில் 38 பேர் உயிரிழந்தனர். 29 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

**டிசம்பர் 27:** இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உடல்நலக்குறைவால் காலமானார். 21 குண்டுகள் முழங்க ராணுவ மரியாதையுடன் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

**டிசம்பர் 29:**
தாய்லாந்தின் பேங்காக்கில் இருந்து, 175 பயணிகள், 6 ஊழியர்கள் என 181 பேருடன் தென்கொரியாவுக்குப் புறப்பட்ட பயணியர் விமானம், அந்நாட்டின் முவான் விமான நிலையத்தில் தரையிறங்கும் போது, ஓடுபாதையில் இருந்து விலகி, தடுப்புச் சுவர் மீது மோதி விபத்துக்குள்ளானதில், 179 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் விமான விபத்தில் 32 வயதாகும் லீ மற்றும் 25 வயதாகும் குவோன் ஆகிய 2 பேர் மட்டுமே உயிர் பிழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2024 இல் வெளியிடப்பெற்றது.